**கூடுதல் சார்பு நீதிமன்றம், பழனி.**
**M.C.O.P.No.174/2022**

2025 ஆம் வருடம் ஜனவரி மாதம் 27 ஆம் நாள் என்பவரின் சாட்சிய வாக்குமூலம் 1873 ஆம் வருடத்தின் 10–வது விதிமுறைகளின்படி ஆணையிட்டு உறுதி கூறப்படுகிறது.

| | | | |
|---|---|---|---|
| பெயர் | : திரு.முனிராஜா (ம.சா.2) | தொழில் | : --- |
| த/பெ.<br>க/பெ. | திரு. முனியாண்டி<br>திரு. | வயது | : 30 |
| கிராமம் | : பெரியப்பா நகர், பழனி டவுன் | இனம் | : ஆண் |
| தாலுகா | : பழனி | நாள் | : 27.01.2025 |
| மாவட்டம் | : திண்டுக்கல் | | |

நான் இந்த மனுவில் மனுதாரர். என்னுடைய சாட்சியத்தை நிரூபண வாக்குமூலமாக தாக்கல் செய்கிறேன். இதில் உள்ள கையெழுத்துக்கள் என்னுடையவை தான். என்னுடைய தகவலின் அடிப்படையில் தான் அது தயார் செய்யப்பட்டது.

ம.சா.ஆ.20 – ராயல்கேர் மருத்துவமனையில் புறநோயாளியாக சிகிச்சை பெற்றதற்காக சிகிச்சை மருத்துவர் வழங்கிய மருத்துவச்சான்று –அசல்.

ம.சா.ஆ.21 – மருந்து மற்றும் மருத்துவமனை பில்கள் ரூ.5,899/– அசல் (14 எண்ணிக்கை)

ம.சா.ஆ.22 – தொடர் சிகிச்சைகள் எடுத்துக்கொண்டதற்கான மருத்துவக் குறிப்புகள் அசல் (4 எண்ணிக்கை)

ம.சா.ஆ.23 – ஆதார் அட்டை நகல் (அசலுடன் ஒப்பீடு செய்து பார்க்கப்பட்டது)

மனுப்படி உத்தரவாக கேட்டுக்கொள்கிறேன்.

**<u>2ம் குறுக்கு விசாரணை :–</u>**

எனக்கு ஏற்பட்ட காயங்கள் குறித்து விபத்து பதிவேடு நகல், காயச்சான்று தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். எனக்கு ஏற்பட்ட காயங்கள் சாதாரணக் காயங்கள் என்று நான் தாக்கல் செய்துள்ள ஆவணங்களில் குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். நான் விபத்து தேதியில் வெளிநோயாளியாகத்தான் சிகிச்சை எடுத்துக்கொண்டேன் என்றால் சரிதான்.

என்னுடைய C.T.ஸ்கேன் ரிப்போர்ட்டை ஆவணமாக தாக்கல் செய்யவில்லை. மேற்படி ஆவணத்தை தாக்கல் செய்யாமல் அதற்கான பில்லை கோரியுள்ளது தவறு என்றால் சரியல்ல. தலைக்கவசம் உடைந்து தலையில் காயம் ஏற்பட்டதாக கூறுவது பொய் என்றால் சரியல்ல. எனக்கு ஏற்பட்ட காயங்கள் சாதாரணக் காயங்கள் என்றும், அன்றைய தினமே குணமாகிவிட்டது என்றும், மருத்துவப் பில்கள் மிகைப்படுத்தி வழங்கப்பட்டுள்ளது என்றும் சொன்னால் சரியல்ல. நான் ஆனந்த விலாஸ் விபூதி ஸ்டோரில் மேனேஜராக வேலை பார்த்து மாதம் ரூ.50,000/- வருமானம் ஈட்டி வந்ததாகச் சொல்வதற்கு ஆவணங்கள் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். நான் எந்த தொழிலும் செய்யவில்லை என்றும், தவறாக இழப்பீடு பெறுவதற்காக பொய்யாக சாட்சியமளிக்கிறேன் என்றால் சரியல்ல. இந்த விபத்து இருசக்கர வாகனத்தை ஓட்டியவரின் கவனக்குறைவால் ஏற்பட்டதால் அதன் உரிமையாளரை வழக்கின் முறையான தரப்பினராக சேர்க்காததால் வழக்கு பிழையுடையது என்றால் சரியல்ல. நான் தாக்கல் செய்துள்ள ம.சா.ஆ.5 மோட்டார் வாகன ஆய்வறிக்கையில் 18.06.2019 -உடன் தகுதிச்சான்று முடிந்துள்ளதாக குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். 1-ம் எதிர்மனுதாரரின் ஓட்டுனர் உரிமம் 03.09.2020 உடன் போக்குவரத்து வாகனங்களுக்கு உரிமம் முடிவடைந்துவிட்டது என்றும், விபத்து தேதியில் ஓட்டுனர் உரிமம் இல்லை என்றும் சொன்னால் சரியல்ல. விபத்தில் சம்பந்தப்பட்ட தோஸ்த் வாகனத்திற்கு தகுதிச்சான்று காலாவதியாகிவிட்டதால் 2-ம் எதிர்மனுதாரர் எவ்வித இழப்பீடும் செலுத்த திருத்தப்பட்ட மோட்டார் வாகன சட்டப்படி கடமைப்பட்டவர் அல்ல என்றால் சரியல்ல.

<u>மறு விசாரணை</u> :- இல்லை.

K BHARATHI
Digitally signed by K BHARATHI
Date: 2025.01.27 18:23:01 +0530